605 / 6

Q1 முதல் Q25 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு .

'அ' பிரிவு

A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(10 மதிப்பெண்கள்)

Q1 அன்பன் தூங்கிக்கொண்டிருந்ததால் சுற்றி நடப்பது எதையும் ____________ உணர முடியவில்லை.

(1) அவனுக்கு
(2) அவனால்
(3) அவனுடன்
(4) அவனின்

Q2 வண்ண மயில் ____________ விரித்து நளினமாய் ஆடியது.

(1) தோகையை
(2) தோகையுடன்
(3) தோகையில்
(4) தோகையோடு

Q3 நேற்று இடி ____________ பெருமழை பெய்தது.

(1) மின்னலால்
(2) மின்னலில்
(3) மின்னலது
(4) மின்னலுடன்

Q4 ____________ நண்பனின் தங்கை அழகாக ஓவியம் வரைவாள்.

(1) எனக்கு
(2) என்னிடம்
(3) எனது
(4) என்னால்



More papers at www.testpapersfree.com

Q5 பெருநடைப் போட்டி அடுத்த __________ ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(1) வாரத்தில்
(2) வாரத்துக்கு
(3) வாரத்துடன்
(4) வாரத்தோடு



More papers at www.testpapersfree.com

A2-செய்யுள் / பழமொழி

Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q6 ______________ சிறுமையும் தான் தர வருமே.

(1) பொறுமையும்
(2) பெருமையும்
(3) வெறுமையும்
(4) அருமையும்

Q7 ஊக்கமது ______________.

(1) கைவிடேல்
(2) புரியேல்
(3) இகழேல்
(4) விரும்பேல்

Q8 குணம்நாடி ______________ நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

(1) பணமும்
(2) கல்வியும்
(3) செல்வமும்
(4) குற்றமும்

Q9 கெடுப்பதூவும் ______________ சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூவும் எல்லாம் மழை.

(1) கொடுத்தார்க்கு
(2) கேட்டார்க்கு
(3) கெட்டார்க்கு
(4) எடுத்தார்க்கு

Q10 முயற்சி உடையார் ______________ அடையார்.

(1) மகிழ்ச்சி
(2) கிளர்ச்சி
(3) புகழ்ச்சி
(4) இகழ்ச்சி



More papers at www.testpapersfree.com

A3 அடைமொழி/எச்சம்

Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி/எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q11 அன்பு _____________ உள்ளம் அருள் நிறைந்தது.

(1) மலர்ந்த
(2) படர்ந்த
(3) சார்ந்த
(4) நிறைந்த

Q12 தாகம் _____________ தண்ணீர்ப் பருக வேண்டும்.

(1) தணித்து
(2) தணிந்து
(3) தணிய
(4) தணித்த

Q13 தேவி _____________ நடந்து வந்தாள்.

(1) ஒய்யாரமான
(2) ஒய்யாரம்
(3) ஒய்யார
(4) ஒய்யாரமாக

Q14 வானொலியில் _____________ நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

(1) வளமான
(2) தரமான
(3) திறமையான
(4) செழிப்பான

Q15 சிங்கையில் மக்கள் தொகை _____________ கொண்டே வருகின்றது.

(1) நிறைந்து
(2) பெருகி
(3) சேர்ந்து
(4) தொடர்ந்து



More papers at www.testpapersfree.com

A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

ஷாஜஹான் என்ற மன்னர் இந்தியாவிலிருந்த மொகலாயப் பேரரசை ஆண்டு வந்தார். அம்மன்னர் மும்தாஜ் என்ற தம் மனைவி மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார். மும்தாஜ் இறந்த பின், அவரை Q16 __________ செய்த இடத்தில் அழகிய கட்டடம் ஒன்றை எழுப்பினார். அது தாஜ்மஹால் என்று வழங்கப்படுகிறது. தம் மனைவி மீது கொண்ட பேரன்பின் நினைவு Q17 __________ அது விளங்குகிறது. தாஜ்மஹாலைக் கட்டி முடிப்பதற்கு அதிக Q18 __________ செலவாயிற்று. பல பகுதிகளிலிருந்தும் Q19 __________ கட்டடச்சிற்பிகள் இருபத்தோராண்டுகள் அரும்பாடுபட்டு அக்கட்டடத்தைக் கட்டி முடித்தனர். அங்கே பல இடங்களிலும் காணப்படும் அழகிய பூவேலைப்பாடுகள் பார்ப்போர் மனத்தை Q20 __________ இழுக்கும். கட்டடத்தைச் சுற்றி அமைந்துள்ள மலர்த்தோட்டங்களும் குளங்களும் தாஜ்மஹாலின் அழகுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன.

Q16 (1) நிறைவு
(2) அடக்கம்
(3) மறைவு
(4) மரியாதை

Q17 (1) சின்னமாக
(2) சக்தியாக
(3) சித்திரமாக
(4) பொருளாக



More papers at www.testpapersfree.com

Q18 (1) நவரத்தினம்
(2) தங்கம்
(3) நகை
(4) பொருள்

Q19 (1) எடுத்துவரப்பட்ட
(2) இழுத்துச்செல்லப்பட்ட
(3) வரவழைக்கப்பட்ட
(4) சேர்க்கப்பட்ட

Q20 (1) தாக்கி
(2) தாவி
(3) பிடித்து
(4) சுண்டி



More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

'இந்தியாவின் தந்தை' என்று போற்றப்பட்டவர் மகாத்மா காந்தி ஆவார். அவர் கத்தி இன்றி ரத்தம் இன்றி இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தவர். அவருக்கு மிகவும் பிடித்த கதை அரிச்சந்திரன் என்ற மன்னனின் வரலாறு. அம்மன்னன் எந்த சோதனை வந்தபோதிலும் பொய் பேசுவதில்லை என்று உறுதி பூண்டு அதன்படி வாழ்ந்து காட்டினான். அக்கதை அவர் மனத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

இளமைப்பருவத்தில் காந்திக்கு அவருடைய திறமையில் நம்பிக்கை இருந்ததில்லை. எனவே, அவருக்குப் பரிசுகள் கிடைக்கும்போதெல்லாம் அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிடுவது வழக்கம். அவர் எப்போதும் தன் நடத்தையில் கவனமாக இருந்து வந்தார். இதில் சிறிது குறை ஏற்பட்டாலும் கண்ணீர்விட்டு அழுதுவிடுவார். கண்டிக்கப்பட்டாலோ கண்டிக்கப்படவேண்டியவன் என்று ஆசிரியர் கருதிவிட்டாலோ, அவரால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. அவர் பள்ளியில் படிக்கும்போது ஒருமுறை தலைமை ஆசிரியர் அவரை அடித்துவிட்டார். அவரிடம் அடி வாங்கியதற்காக காந்தி வருந்தவில்லை. கண்டிக்கப்படவேண்டியவன் என்று தலைமையாசிரியர் நினைத்தற்காகவே அவர் பெரிதும் வருந்தினார்.

அவர் படித்த பள்ளியில் தினசரி மாலை வேளையில் உடற்பயிற்சி வகுப்பு நடக்கும். அந்த வகுப்பிற்கு ஒவ்வொரு மாணவனும் கட்டாயம் செல்லவேண்டும். இல்லாவிட்டால் தலைமையாசிரியர் சும்மா விடமாட்டார். அன்று சனிக்கிழமை. காந்தியின் அப்பாவுக்கு உடல் நலமில்லை. காந்தி பள்ளியை விட்டு வந்ததிலிருந்து தன் தந்தையாருக்கு உதவியாக சிறு வேலைகளைச் செய்தார். அன்று வானம் வேறு மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மேகங்கள் சூரியனை மறைத்துக்கொண்டு இருந்தன. அவரிடம் கடிகாரமும் இல்லை. நேரம் வேறு தெரியவில்லை.

காந்தி மெதுவாக வேலைகளைச் செய்துவிட்டு நிதானமாகப் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டார். அவர் பள்ளிக்குப் போய் சேருவதற்குள் எல்லா மாணவர்களும் உடற்பயிற்சி வகுப்பு முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். காந்தி பெருத்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார். திங்கட்கிழமை பள்ளிக்குச் சென்ற அவரிடம், "நீ ஏன் உடற்பயிற்சி வகுப்புக்கு வரவில்லை?" என்று தலைமையாசிரியர் கேட்டார். காந்தி நடந்ததைக் கூறினார். தலைமையாசிரியர் அவரை நம்ப மறுத்து அபராதம் கட்ட வைத்தார். தான் பொய் சொல்வதாகத் தலைமையாசிரியர் நினைத்து விட்டாரே என்பதால் கதறி அழுதார், காந்தி. தான் கவனக்குறைவாக இருந்ததால்தானே இவ்வாறு நடந்தது! என்று உணர்ந்தார். ஒருவன் உண்மை பேசினால் மட்டும் போதாது என்பதை அன்று அவர் கற்றுக்கொண்டார்.



More papers at www.testpapersfree.com

**Q21** முதல் **Q24** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(8 மதிப்பெண்கள்)

Q21 காந்தி ஆச்சரியம் அடையக் காரணம் என்ன ?

(1) அவரிடம் திறமை இல்லாததால்
(2) அவர் தம் திறமையை நம்பாததால்
(3) அவரின் திறமையை பிறர் நம்பாததால்
(4) அவரின் திறமையை ஆசிரியர் நம்பாததால்

Q22 காந்தியால் எதைத் தாங்கிக் கொள்ள முடியாது ?

(1) தனக்குத் திறமையில்லை என்பதை
(2) யாராவது தன்னை அடிப்பதை
(3) ஆசிரியரால் கண்டிக்கப்படுவதை
(4) தனக்குப் பரிசு கிடைக்காததை

Q23 காந்தி ஏன் உடற்பயிற்சி வகுப்புக்கு நேரத்தோடு செல்லவில்லை ?

(1) வானம் இருண்டு இருந்ததால்
(2) தந்தைக்கு உதவி புரிந்ததால்
(3) நேரங்கழித்து செல்ல எண்ணியதால்
(4) நேரத்தை கணிக்க முடியாததால்

Q24 அவர் கற்றுக்கொண்ட பாடம் யாது ?

(1) கவனமாக இருப்பதோடு பொய்யும் பேசக்கூடாது என்று
(2) உண்மை பேசுவதோடு கவனமாகவும் இருக்கவேண்டும் என்று
(3) பொய் பேசினால் கவனமாக இருக்கவேண்டும் என்று
(4) உண்மை பேசுவதால் பிரச்சினையில் மாட்டிக்கொள்ளலாம் என்று



More papers at www.testpapersfree.com

சொற்பொருள்

**வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25 தாக்கத்தை

(1) பாதிப்பை

(2) மாற்றத்தை

(3) ஏமாற்றத்தை

(4) சங்கடத்தை



More papers at www.testpapersfree.com

## 'ஆ' பிரிவு

**Q26 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.**

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q26 | மக்கள் ஆலயத்துக்குச் சென்றனர். அங்கே அவர்கள் ________ வணக்கம் செய்தனர். | Q26(    ) |
| Q27 | நாம் எப்போதும் நல்லதைச் செய்ய ________ வேண்டும். அதனால் நமக்கும் நன்மையே உண்டாகும். | Q27(    ) |
| Q28 | நாம் பிறருடன் சேர்ந்து வாழப் பழக வேண்டும். நம்மால் ________ செயல்பட முடியாது. | Q28(    ) |
| Q29 | ஆகஸ்டு 9ஆம் தேதி நம் தேசிய தினம் கொண்டாடப்படும். அதில் ________ வேடிக்கையும் ஓர் அங்கமாய் நிகழும். | Q29(    ) |

| | |
|---|---|
| 1. வாண | 2. விழைய |
| 3. இறை | 4. வான |
| 5. தனித்து | 6. தணித்து |
| 7. விளைய | 8. இரை |



More papers at www.testpapersfree.com

D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் வழங்கும்

# திருக்குறள் விழா 2017



பேருரை : குறள் வழி வாழ்வோம்
வழங்குபவர் :திரு தமிழ்மாறன்
சிறப்பு விருந்தினர் : டாக்டர் மதியழகன்

**20.3.2017**
**சனிக்கிழமை மாலை 6 மணி**
**சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரி மாநாட்டு மண்டபம்**
**20 டோவர் சாலை, சிங்கப்பூர் 139651(டோவர் எம்ஆர்டி)**

*நிகழ்ச்சி நிரல்*
*6.00 - பதிவு*
*6.30 – குறள் வழி வாழ்வோம்*
*8.30 – 'கதைக்குக் குறள்'*
*9.00 – நன்றியுரை ( தலைவர் திரு ராம்)*

200 பேர் மட்டுமே அமர இடவசதி உள்ளது
ஏமாற்றத்தைத் தவிர்க்க வருகையை முன் பதிவு செய்தல் நன்று
பதிவுக்கு : குமாரி கவிதா (செயலவை உறுப்பினர்)
தொலைபேசி எண்: 93325769

திருக்குறள் கணினிவட்டை அன்றையதினம் 20% சிறப்புக் கழிவு விலையில் வாங்கலாம்.

மாணவர்களுக்கென்றே நடத்தப்படும் 'கதைக்குக் குறள்' என்ற அங்கத்தில் நட்பு, கல்வி, ஒழுக்கமுடைமை, அன்புடைமை, ஈகை, வாய்மை, புகழ் ஆகிய அதிகாரங்களை ஒட்டிக் கூறப்படும் கதைகளுக்கு ஏற்ற குறளைக் கூறுபவர்களுக்கு காசோலைகள் காத்திருக்கின்றன. (எத்தனை கதை என்பது எஞ்சிய நேரத்தைப் பொருத்து அமையும்)

பரிசுத் தொகை : **$30**



More papers at www.testpapersfree.com

Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது.

(10 மதிப்பெண்கள்)

Q30 ஏன் முன்பதிவு செய்யவேண்டும்? (2 மதிப்பெண்கள்)

(1) இடத்தை உறுதி செய்ய
(2) கட்டணத்தில் கழிவு பெற
(3) 20% கழிவில் திருக்குறளை வாங்க
(4) போட்டியில் பங்கு கொள்ள

Q31 'கதைக்குக் குறள்' பகுதியில் கூறப்படும் கதைகளின் எண்ணிக்கை எதை வைத்து முடிவு செய்யப்படும் ? (2 மதிப்பெண்கள்)

(1) மாணவர்களின் பதிலை
(2) கால அவகாசத்தை
(3) காசோலையின் எண்ணிக்கையை
(4) ஒதுக்கப்பட்ட நேரத்தை

Q32 பரிசு எப்படி அமையும்? (2 மதிப்பெண்கள்)

(1) பொருளாக
(2) காசோலையாக
(3) ரொக்கமாக
(4) பாராட்டாக

Q33 போட்டிக்கு மாணவர்கள் எப்படித் தங்களைத் தயார் செய்ய வேண்டும்? (4 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

**சுயவிடைக் கருத்தறிதல்**

**D8 பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

ஓர் ஊரில் துறவி ஒருவர் இருந்தார். அவர் தமக்குப் பசி ஏற்படும்போது ஒரு மாமரத்தை நெருங்கி சில மந்திரங்களை உச்சரிப்பார். அடுத்த வினாடி அம்மரத்தில் மாங்கனிகள் தோன்றும். துறவி ஒரு கனியைப் பறித்துச் சாப்பிட்டுவிட்டு புறப்பட்டுவிடுவார்.

துறவியின் இந்தச் சக்தியைப் பற்றி கேசவன் என்பவன் அறிந்தான். 'துறவி எனக்கு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தால் நான் வறுமையில் வாடத் தேவையில்லையே," என்று நினைத்தான். துறவியை நாடி தன் நிலையை விளக்கி உதவி கேட்டு மன்றாடினான். துறவி அவனுடைய வேண்டுகோளை ஏற்றார். மந்திரத்தைச் சொல்லிக்கொடுப்பதற்கு முன், " நீ இந்த மந்திரத்தைக் கற்றுக்கொண்டு வியாபாரம் ஆக்கிவிடக்கூடாது. எந்தக் காரணத்திற்காகவும் பொய் பேசக்கூடாது! மீறினால் மந்திரம் ஒருநாள் பலிக்காமல் போய்விடும்! " என்று எச்சரித்தார். அதன்படியே நடப்பதாக வாக்களித்தான் கேசவன். துறவியும் மந்திரத்தைக் கற்றுக்கொடுத்துவிட்டு அகன்றார்.

கேசவன், உடனே அந்த மாமரம் இருக்கும் இடத்திற்குச் சென்று மந்திரத்தை உச்சரித்தான். என்ன ஆச்சரியம்! மரத்தில் மாங்கனிகள் தோன்றின. அவன் பெருமகிழ்ச்சியுடன் அவற்றைப் பறித்துக்கொண்டுபோய் சந்தையில் நல்ல விலைக்கு விற்றுப் பணமாக்கினான். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்த போதும் அவனுக்கு எந்தப் பிரச்சினையும் நேரவில்லை என்பதால் கொடுத்த வாக்கை அலட்சியப்படுத்தினான்.

அந்நாட்டு அரசன் கேசவன் செய்து வந்த தவற்றை அறிந்தான். அவனை வரவழைத்து "உன் மந்திரச் சக்தி பற்றி அறிவேன். இதை நீ எவ்வாறு கற்றாய் ?" என்று விசாரித்தான். "மன்னா, நான் பல காலம் தவம் செய்து என் சொந்த முயற்சியால் இதைக் கற்றுக்கொண்டேன்," என்று வாய்க்கூசாமல் பொய் உரைத்தான் கேசவன். "அப்படியானால் என் தோட்டத்திலுள்ள மாமரங்களில் மாங்கனிகள் தோன்றும்படி மந்திரம் செய்!" என்றான் மன்னன். கேசவன் பெருமையுடன் மந்திரத்தை வாய்க்குள் முணுமுணுத்தான். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அவன் பதற்றத்துடன் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தான். எந்தப் பலனுமில்லை.

அப்போது அரசன், "எனக்கு எல்லா உண்மையும் தெரியும். நீ நன்றி மறந்ததோடு வாக்கும் தவறிவிட்டாய். அதனால் நீ தண்டிக்கப்பட வேண்டியவன். இவனை சிறையில் அடையுங்கள் இவனுடைய வாழ்நாள் முடியும்வரை இவன் அங்கேயே கிடக்க வேண்டியதுதான்!" என்றார். காவலர்களும் அவ்வாறே செய்தனர்.



More papers at www.testpapersfree.com

Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளை கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)

Q34. துறவி எப்படித் தன் பசியைப் போக்கினார் ? (3 மதிப்பெண்கள்)

Q35. கேசவன் துறவியிடம் என்ன வேண்டினான்? (2 மதிப்பெண்கள்)

Q36. எப்போது மந்திரம் பலிக்காமல் போகும் என்றார் துறவி ? (3 மதிப்பெண்கள்)

Q37. கேசவன் துறவிக்குக் கொடுத்த வாக்கை அலட்சியம் செய்யக் காரணம் என்ன? (4 மதிப்பெண்கள்)

~~Q37. கேசவன் துறவிக்குக் கொடுத்த வாக்கை அலட்சியம் செய்யக் காரணம் என்ன?~~

Q38. கேசவன் எதனால் பதற்றம் அடைந்தான் ? (4 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

Q39. கேசவனுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது ? (2 மதிப்பெண்கள்

Q40. அரசன் ஏன் கேசவனை "நன்றி மறந்தவன்" என்றான் என்பதை விளக்கி நீ உன் நண்பனுக்கு ஒரு குறிப்பு எழுது.

அன்புள்ள முரளி,

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# Answer Key

(அன்பன் தூங்கிக் )

| | | |
|---|---|---|
| 1. 2 | 13. 4 | 26. 3 |
| 2. 1 | 14. 2 | 27. 2 |
| 3. 4 | 15. 2 | 28. 5 |
| 4. 3 | 16. 2 | 29. 1 |
| 5. 2 | 17. 1 | 30. 1 |
| 6. 2 | 18. 4 | 31. 4 |
| 7. 1 | 19. 3 | 32. 2 |
| 8. 4 | 20. 4 | |
| 9. 3 | 21. 2 | |
| 10. 4 | 22. 3 | |
| 11. 4 | 23. 4 | |
| 12. 3 | 24. 2 | |
| | 25. 1 | |

33. மாணவர்கள் 'கதைக்குள் குறள்' என்ற போட்டி அங்கத்துக்கு, நட்பு, கல்வி, ஒழுக்கமுடைமை, அன்புடைமை, ஈகை, வாய்மை, புகழ், ஆகிய அதிகாரங்களை ஓட்டிக் கூறப்படும் கதைகளுக்கு ஏற்ற குறளை கூறும் அளவிற்கு தங்களை தயார் செய்ய வேண்டும்.
34. துறவி அவருக்கு பசி ஏற்படும் போது ஒரு மாமரத்தை நெருங்கி சில மந்திரங்களை உச்சரிப்பார். மறு வினாடியே அம்மரத்தில் மாங்கனிகள் தோன்றும். துறவி ஒரு மாங்கனியை பறித்துச் சாப்பிட்டுவிட்டு செல்வார். துறவி இப்படியே தன் பசியைப் போக்கினார்.
35. கேசவன் துறவியிடம் தன் நிலையை எடுத்துக்கூறி, துறவி அவனுக்கு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தால் அவன் வறுமையில் வாட தேவை இருக்காது என்பதை விளக்கி உதவி வேண்டினான்.
36. மந்திரத்தைக் கற்றுக்கொண்டு வியாபாரம் ஆக்கினாலோ, எந்தக் காரணத்திற்காகவோ பொய் பேசினாலோ, மந்திரம் பலிக்காமல் போய்விடும் என்றார் துறவி.
37. கேசவன் மாமரத்தினருகே சென்று மந்திரத்தை உச்சரித்தான். மாங்கனிகள் தோன்றின. அவற்றைப் பறித்துக்கொண்டு போய் சந்தையில் நல்ல விலைக்கு விற்று பணமாக்கினான். இதை தொடர்ந்து செய்து வந்த போதும் -அவனுக்கு எந்தப் பிரச்சனையும் ஏற்படவில்லை

More papers at www.testpapersfree.com

என்பதால் கேசவன் துறவிக்குக் கொடுத்த வாக்கை அலட்சியம் செய்தான்.

38. கேசவன் மன்னனின் தோட்டத்திலுள்ள மாமரங்களில் மாங்கனிகள் தோன்ற மந்திரம் உச்சரித்த போது, மாங்கனிகள் எதுவும் தோன்றாததால் அவன் பதற்றம் அடைந்தான்.

39. கேசவனுக்கு வாழ்நாள் முடியும் வரை சிறையில் அடைக்கும்படி மன்னரால் தண்டனை வழங்கப்பட்டது.

40. கேசவன் தன் பசியைப் போக்கிக் கொள்ள துறவியிடம் மன்றாடி மாமரத்தில் மாங்கனிகளைத் தோன்ற செய்யும் மந்திரத்தைக் கற்றான். துறவியும் வியாபாரம் ஆக்கக்கூடாது, பொய் கூறக் கூடாது என்ற நிபந்தனைகளோடு மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். ஆனால், கேசவனோ, மாங்கனிகளைப் பறித்து சந்தையில் நல்ல விலைக்கு விற்றான். மன்னனிடம் சொந்த முயற்சியால் மந்திரத்தை கற்றதாக பொய் கூறினான். இதனால் அரசன் கேசவனை நன்றி மறந்தவன் என்றான்.

More papers at www.testpapersfree.com

40) அருணின் குழுவில் அவனே, சிறந்த விளையாட்டாளன். திடீரென்று அவனுக்கு ஏற்பட்ட வியத்தால் அவன் பாதியிலேயே விளையாட்டிலிருந்து விலகினான். அதன் காரணமாகவே அருணின் குழுவினர் போட்டியில் தோல்வியுற்றனர்.

More papers at www.testpapersfree.com